படுத்தி இருக்கிறார்கள். இப்போது பகுதி 6 மற்றும் 2 (ஏ) ஆகிய இடங்களில் மட்டும் இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மற்ற பகுதிகளில் எல்லாம் இந்தப் பணிகள் முடிந்து விட்டன. இந்த ஆண்டிற்குள்ளாக இந்தத் திட்டம் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காட்டுமன்னார்கோயில் அரசு மருத்துவமனை

*6521—திரு. ஏ. தங்கராஜு :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காட்டுமன்னார்கோயில் அரசு மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஏ. தங்கராஜு : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோயில் தாலுக்கா நகரமாக இருப்பதால், அங்குள்ள அரசு மருத்துவமனையில் உள்ள படுக்கை வசதிகளை அதிகப்படுத்தவும் அந்த இடத்தைக் கொஞ்சம் விஸ்தரிப்பதற்கும் இந்த அரசு ஆவன செய்து தருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது காட்டுமன்னார்கோயில் மருத்துவமனை 8 படுக்கை வசதிகளோடு கூடிய மருத்துவமனையாக அது இயங்கி வருகிறது. அங்கே அறுவைச் சிகிச்சை அரங்கம், பிணவறை போன்ற

வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அரசினுடைய நிதிநிலையைக் குறித்து அந்த படுக்கைகளினுடைய வசதிகளை அதிகரிப்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

காரையூரில் கால்நடை மருத்துவமனை

*988—திரு. ஆலவயல் சுப்பையா :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருமயம் தொகுதி, காரையூரில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது வாய்ப்பில்லை.

திரு. ஆலவயல் சுப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னமராவதியை உள்ளடக்கிய அந்தப் பகுதி 43 ஊராட்சிகளைக் கொண்டது. பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் ஒரே ஒரு கால்நடை மருந்தகம்தான் இருக்கிறது. ஆகவே இன்னொரு கால்நடை மருந்தகத்தை அமைக்க அரசு விரைவில் ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கால்நடை மருந்தகம் அமைப்பதற்கு உரிய தீர்மானத்தினை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி வைத்தால், அதுகுறித்து தக்க நேரத்தில் ஆய்வு செய்து அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கு ஜெர்மனியிலிருந்து உயர்தர மாடுகள் வாங்குதல்

*6601—திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேற்கு ஜெர்மனியிலிருந்து தமிழக அரசு உயர்தர மாடுகள் வாங்கி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவைகள் எங்கு வழங்கப்பட்டு உள்ளன?